


# 2026-நவராத்திரி சிறப்பு மலர்

MD COMMUNITY KITCHEN 1980
Responsibly Tasty

நம்பகமான ரீடைல் பிராண்டுகள்:
akkarai | THINNAI Relax & Recharge Responsibly | ICECREAM VAN Homely IceCream | Cafe Daringly Different like you!

சுவையுடன் பொறுப்பான உணவு பிராண்டுகள்:
SIDEKICK | CHOCOKICK DIFFERENCES make us ONE | TEATIME FRIEND Dip & Enjoy! | RUSKING More Health. More Wealth | OATIES 35% Oats in Cookies

சுவையுடன் பொறுப்பான உணவுகள்
உங்கள் தேடுதல் இங்கே நிறைவடைகிறது
மதுரை மக்களையும் மதுரைக்கு வரும் விருந்தினர்களையும் மகிழ்விக்கும் பொறுப்பான சமையலறைகள்
இணையவழி : 24/7-ம் வாங்கிட www.akkarai.co.in | www.mdcommunitykitchen.com | www.indianfoods.in | இந்தியா முழுவதும் டெலிவரி நேரில் : மதுரை | கீழடி | தட்டான்குளம் | சென்னை | +91 9791900447

# கும்பாபிஷேகம் கண்ட மதுரை மீனாட்சியம்மன் கோவில் சிறப்புகள்

ஈசனின் 64 திருவிளையாடல்களும் மதுரையிலேயே நடந்தவை. சுவாமி சந்நிதி பிராகாரங்களில் 64 திருவிளையாடல் காட்சிகள் சிற்பங்களாக இருக்கின்றன. இக்கோவிலின் தல விருட்சம் கடம்ப மரம், தீர்த்தம் பொற்றாமரை குளம், மற்றும் வைகை. பல நூறு வருடங்களுக்கு முன் இங்குள்ள பொற்றாமரைக் குளத்தில் கிடைக்கப்பெற்ற ஸ்படிக லிங்கம், இன்றும் மதுரை ஆதீனத்தில் வழிபாட்டில் உள்ளது. இறைவனின் 5 சபைகளில் இத்தலம் வெள்ளி சபை. மற்ற எல்லா இடங்களிலும் இடது காலைத் தூக்கி நடனமாடும் நடராஜர், இங்கு வலது காலைத் தூக்கி வைத்து நடனமாடுகிறார். இந்த சந்நிதியே வெள்ளியம்பலம் எனப்படுகிறது.

## சந்தனக் காப்பில் முக்குறுணி விநாயகர்

முக்குறுணி விநாயகர்: தெற்கு கோபுர வாயில் வழியே உள்ளே நுழைந்தவுடன் நேரே நாம் காண்பது முக்குறுணி விநாயகர் சந்நிதி. கி.பி. 16231659 வரை மதுரையை ஆண்ட மன்னர் திருமலை நாயக்கர் தனக்கு அரண்மனை கட்டுவதற்காக வண்டியூர் தெப்பக்குளம் அருகே மண்ணை வெட்டியபோது,



மண்ணில் புதையுண்டிருந்த இந்த விநாயகர் திருவுருச் சிலையை கண்டெடுத்து இங்கே கி.பி. 1645ல் பிரதிஷ்டை செய்தார். ஒரே கல்லினால் ஆன இவ்விநாயகரின் உயரம் 7 அடி. ஒவ்வொரு விநாயக சதுர்த்தியின் போதும் இந்த விநாயகருக்கு 18 படி (முக்குறுணி) அரிசியால் கொழுக்கட்டை தயார் செய்து படைக்கப்படுவதால் இவ்விநாயகர் முக்குறுணி விநாயகர் என அழைக்கப்படுகிறார்.

## மீனாட்சி அம்மன் கோவிலின் மற்ற சிறப்புகள்

ஈசனே தருமி என்ற புலவருக்காக இறையனாராக வந்து நக்கீரருடன் வாதிட்ட தலம். நக்கீரர் தன்னுடன் வாதாடுவது இறைவன் என்று தெரிந்தும் "நெற்றிக்கன் திறப்பினும் குற்றம் குற்றமே" என்று வாதிட்ட தலம்.இத்தலத்தில் தான் முருகன் திருவருளால் ஊமைத் தன்மை நீங்கிய குமரகுருபரர் மீனாட்சி பிள்ளைத்தமிழ் அரங்கேற்றியதும், , திருவாதவூராருக்கு மாணிக்கவாசகர் என்ற பெயரை இறைவன் கொடுத்ததும் நிகழ்ந்தது.

திருஞானசம்பந்தர் அனல் வாதம், புனல் வாதம் செய்து சைவத்தை பாண்டிநாட்டில் நிலைபெறச் செய்த தலம்.சிவனின் 64 திருவிளையாடல்களை நிகழ்த்திய தலம்.சிவனே எல்லாம் வல்ல சித்தராக எழுந்தருளியிருக்கும் அதி அற்புத தலம்வருடம் முழுவதும் எப்போதும் திருவிழாக்கள் நடந்த வண்ணமே இருக்கும் சிறப்பு வாய்ந்த தலம்.பாணபத்திரருக்கு தன் கைப்பட பாசுரம் எழுதிக்கொடுத்து சேரனிடம் இறைவன் நிதி பெற வைத்த தலம்இராமர், லட்சுமணர் மற்றும் பிற தேவர்களும் முனிவர்களும் பூசித்துப் பேறு பெற்ற தலம்.இத்தலத்திலுள்ள பொற்றாமரைக் குளமும், தெற்கு கோபுர வாயில் வழியாக உள்ளே நுழைந்தால் நேரே காட்சியளிக்கும் முக்குறுணி விநாயகரும் மிகவும் தரிசிக்கத் தக்கவையாகும்.

## சரஸ்வதி பூஜை ஆயுத பூஜை வழிபாடு செய்யும் நேரம்

19.10.2026 திங்கட்கிழமை மதியம் 12 மணி முதல் 1 மணிக்குள் மாலை 7.00 மணிமுதல் இரவு 8.00மணிகுள் சரஸ்வதி பூஜை, ஆயுத பூஜை செய்வது உத்தமம்.

## 20.10.2026 விஜயதசமி சிறப்பு நேரம்

செவ்வாய் கிழமை காலை8.00 மணி முதல் 9.00 மணிவரை குழந்தைகளை பள்ளியில் சேர்த்து மேன்மை பெறலாம். அதே நேரத்தில் இல்லத்தில் வழிபாடு செய்யலாம்.

வேம்பத்தூர் கவிராஜர் பண்டிதர்
வாராஹி உபாசகர் பண்டிதர்
சூ.வேதநாராயணன் ஸ்வாமி
செல்: 9894142409

# திருவண்ணாமலை பூத நாராயண பெருமாள் கோவிலில் ஆண்டுக்கு ஒரு முறை நடைபெறும் கிருஷ்ணர் அலங்காரம்

கிருஷ்ணர் பிறந்தது: மதுராவில் தேவகி–வசுதேவருக்கு. பின்னர் நந்தகோபர்–யசோதையின் இல்லத்தில் வளர்ந்தார்.

முதல் முக்கிய அசுர வதம்: கம்சன் அனுப்பிய பூதனை. பூதனை பெண் வேடத்தில் வந்து, விஷம் தடவிய மார்பகத்தால் கிருஷ்ணருக்கு பாலூட்ட முயன்றாள். கிருஷ்ணர் அவளுடைய உயிரையே உறிஞ்சி, அவளை சம்ஹாரம் செய்தார்.

இந்த நிகழ்வு ஸ்ரீமத் பாகவதம், 10ஆம் ஸ்கந்தம், 6ஆம் அத்தியாயத்தில் வருகிறது. திருவண்ணாமலை யில் பிரசித்தி பெற்ற ஸ்ரீ பூதநாராயண பெருமாள் திருக்கோயிலில் தோன்றி அருள்பாலிக்கும் எம்பெருமாளின் திருநாமம் ஸ்ரீ பூதநாராயண பெருமாள் (பூதனை சம்ஹார நாராயணன்) என்பதே பெயர்காகாரணமாகவும்







தோற்ற அமைப்பின் கதையாகவும் ஸ்தல புராணமாகவும் சொல்லப்படுகிறது.

ஒரு முக்கியமான நுணுக்கம்: “கிருஷ்ணர்குழந்தையாக அவதரித்த உடனேயே செய்த முதல்செயல்/ சம்ஹாரம்” என்று கேட்டால், பூதனை வதமே பொதுவாக முதல் அசுர வதமாகக் குறிப் பிடப்படுகிறது. இந்த சம்ஹாரமானது ஸ்ரீ கிருஷ்ணர் அவதரித்த 1 மாத காலத்திர்க்குள் (6 நாட்களில் என்றும் 27 நாட்களில் என்றும் சொல்லப்படுகிறது)

அதன் நினைவாக அவர் அவதரித்த ஆவணி கோகுலாஷ்ட்டமிக்கு சந்தனக்காப்பு அலங் காரமும் அடுத்த மாதத்தில் புரட்டாசியில் வரும் மத்யாஷ்டமிக்கு எம்பெருமாளுக்கு வெண்ணை காப்பு அலங்காரம் செய்யப்படுகிறது.






உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளிவரும் இதழ்
ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு
விருப்ப சந்தா செலுத்த ஸ்கேன் செய்யவும்
e-magazine
www.aanmeegamalar.com
# ஆன்மிகமலர்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!! மெயில் புக்
படியுங்கள்... aanmeegamalar.com இதுவரை வெளிவந்த 185 e-book கட்டணமின்றி டவுன்லோடு செய்து படிக்கலாம்

# பண்டிகையில் உயர்ந்தது சரஸ்வதி பூஜை

'அசுர' என்பது 'வாழ்க்கையின் சுகபோகத்தில் மட்டுமே ஈடுபாடு கொண்டு, பொருட்கள் தரும் இன்பத்தில் முழ்கி இருப்பவன்' என்ற அர்த்ததை கொண்டுள்ளது.

இத்தகைய மகிஷாசுரன் நம் ஒவ்வொரு மனித மனதிலும் இடம் பெற்றிருக்கிறான். அதோடு, அந்த மனிதருக்குள்ளிருக்கும் தெய்வீக குணங்களையும் தன் கையகப்படுத்தி கொண்டு விடுகிறான். இத்தகைய அசுரனின் வசத்தி லிருந்து நாம் விடுபட சக்தி தேவியின் பூஜை அவசியமாகிறது. 'மகிஷாசுர வதம்' உணர்த்தும் மறை பொருள் இதுவே. ஆகையால் தான், நவராத்திரியின் ஒன்பது நாட்களிலும் சக்தி தேவியின் வழிபாடு மேற்கொள்ளப்பட்டு, அதன் வெற்றியை தசமி தினத்தன்று விஜயதசமியாக கொண்டாடபடுகிறது.

எப்போதெல்லாம் தமோ மற்றும் அசுர குணம் கொண்ட கொடிய மனிதர்கள் பலம் மிகுந்து, நேர்மையான சாத்வீக மனிதர்களுக்கு தொல்லைகள் தரஆரம்பிகின்றனரோ, அப்போது அறத்தை நிலைநாட்ட அந்த தேவி அவதரிக்கிறாள். இதுவே இந்த தெய்வத்தின் விரதம்.

நவராத்திரியின் போது ஸ்ரீ துர்கா தேவியின் தத்துவமானது வெளி மண்டலத்தில் 1000 மடங்கு அதிகமாக உள்ளது. எனவே, இந்நாட்களில் ஒருவர் தேவியினிடத்தேயிருந்து அதிக



ஆன்மீக பலனை அடைய 'ஸ்ரீ துர்கா தேவியை நமஹ' என்னும் நாமஜபத்தை அதிகபட்சமாக ஜபிக்க வேண்டும்.

ஆன்மிகத்தின் அடிப்படையில் அமைந்திருக்கும் இந்த அறிவியல் பின்ன ணியுடன்,ஸ்ரீ துர்கா தேவி வழிபாட்டின் சடங்குகளை நாம் புரிந்து கொண்டு செயல்படும் போது அதிகபடியான தெய்வீக சக்தியினை கிரகிக்க முடியும்.

### சரஸ்வதி பூஜையின் விளக்கம்

பண்டிகைகளில் பூஜை என்ற அடைமொழி சேர்ந்திருப்பது சரஸ்வதி பூஜைக்கு தான். தீபாவளி பூஜை, பொங்கல் பூஜை என்று சொல்வதில்லை. பூஜை என்ற சொல் பூஜா என்பதில் இருந்து பிறந்தது. பூ என்றால் பூர்த்தி. ஜா என்றால் உண்டாக்குவது. தான் என்ற அகங்காரம், அடுத்தவனை விட நன்றாக வேண்டுமென்ற பொறாமை, உலக வாழ்வு நிரந்தரமானது என்ற எண்ணம் ஆகியவை மனிதனை ஆட்டிப்படைக்கின்றன.

இதையே சைவசித்தாந்தத்தில் ஆணவம், கன்மம், மாயை என்கிறார்கள். இந்த மும்மலங்களையும் அகற்றி ஞானத்தை உண்டாகச் செய்வதே பூஜை.

சரஸ்வதி கல்வியாகிய ஞானத்தை தருபவள் என்பதால், அவளது விழாவுக்கு மட்டும் பூஜை என்ற அடைமொழி இணைந்தது. சரஸ்வதி பூஜையன்று கல்வி, கலைகள் என எது தொடங்கினாலும் ஜெயமாக முடியும் என்பது நம்பிக்கை.

மழலை குழந்தைகளை பள்ளியில் சேர்ப்பதற்கும் பாட்டு, இசைக் கருவிகள் பயிற்சி, நடன பயிற்சி, பிறமொழி பயிற்சி, புதிதாக ஒரு தொழிலை கற்றுக்கொள்வது ஆகியவற்றை இந்த நாளில் தொடங்கினால் சரஸ்வதி தேவியின் அருள் பரிபூரணமாக கிடைக்கும். அன்றைய தினம் குழந்தைகளின் கை பிடித்து, பரப்பி வைத்திருக்கும் நெல்லில் 'அ' என்று எழுத கற்றுக் கொடுப்பது 'வித்யாரம்பம்' எனப்படுகிறது.

## நவராத்திரி வழிபாட்டில் பல்வேறு சடங்குகளின் முக்கியத்துவம்:

### அகண்ட தீபம் ஏற்றுதல்

கலச ரூபமான இந்த ப்ரமாண்டத்தில், வெளிப்பட்ட ஆதிசக்தியை அகண்ட நந்தாதீபமாக ஒன்பது நாட்கள் வழிபடுவதே, நவராத்திரியின் சிறப்பம்சம். நவராத்திரியின் போது சுற்றுப்புற சுழலில் தேவியின் தேஜ தத்துவம் நிறைந்து காணப்படுகிறது. அகண்ட தீபம் (தொடர்ந்து எரியும் நந்தா விளக்கு), தேஜ தத்துவத்தை ஆகர்ஷிப்பதால், தேவியின் தேஜோ மயம் அவ்வீட்டின் சுற்று சுழலில் பரவுகிறது.

இதன் காரணமாக அவ்வீட்டில் தொடர்ந்து தெய்விக அதிர்வலைகள் நிரம்பியிருப்பதால், அவ்விடத்தில் உள்ளவர்களுக்கு பெரிதும் நன்மை உண்டாகிறது. எனவே நவராத்திரி வழிபாட்டில் அகண்ட தீபம் ஏற்றுவது மிக முக்கியமானதாகும்.



# ஸ்ரீமத் வேங்கடசுப்பானந்த சுவாமிகளின் 130–ஆம் ஆண்டு குருபூஜை விழா




ஓம் தத் சத் திருத்துருத்தி இந்திர பீடம் கரபாத்திர சுவாமிகள் பரம்பரை ஸ்ரீமத் ஈசூர் சச்சிதானந்த சுவாமிகள் மரபில் வந்த ஸ்ரீமத் வேங்கடசுப்பானந்த சுவாமிகளின் 130–ஆம் ஆண்டு குருபூஜை விழா, 23.10.2026) வெள்ளிக்கிழமை அன்று எண்.31, கோதண்டராமன் தெரு, பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை 600021–இல் நடைபெறவிருக்கிறது.

நிகழ்ச்சி நிரல்

காலை 4.00 மணி முதல் 4.30மணி வரை கோ பூஜை, காலை 4.30 மணி முதல் 6.00 மணி வரை கணபதி ஹோமம், நவகிரக ஹோமம், மஹா குரு ஹோமம்

காலை 7.30 மணி அன்னதானம், காலை 9.30 மணி சிறப்பு அபிஷேகம், காலை 10.00 மணி ஸ்ரீமத் வேங்கடசுப்பானந்த சுவாமிகள் தேர் வீதி உலா, பகல் 12.00 மணி மகா ஆரத்தி, பகல் 12.00 மணி அன்ன தானம், இரவு 9.00 முதல் 9.30 வரை குரு பூஜையின் நிறைவு ஆரத்தி

பக்தர்கள் அனைவரும் கலந்து கொண்டு விழாவினை சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்

ஸ்ரீமத் வேங்கடசுப்பானந்த ஜீவ சமாதி மடம் டிரஸ்ட் 7092023428 பஸ் இறங்கும் இடம் : பழைய வண்ணார பேட்டை மஹாராணி போஸ்ட் ஆபிஸ் மெட்ரோ இரயில் இறங்கும் இடம் : தியாகராயா கல்லூரி.

தினமும் மடாலயம் திறந்திருக்கும் நேரம்: காலை 7.00 மணி முதல் பிற்பகல் 2.00 மணி வரை மாலை 4.00 மணி முதல் 8.30 மணி வரை

வியாழக்கிழமை பிரதோஷம், பௌர்ணமி, அமாவாசை தினங்களில் மாலை 6.00 மணியளவில் சிறப்பு அபிஷேகம் மற்றும் ஆராதனை நடைபெறும்.

மடாலயத்தில் பௌர்ணமி மற்றும் அமாவாசை தினங்களில் இரவு தங்கும் வசதி உள்ளது.

மடாலயத்தில் தினந்தோறும் பகல் 12.45 மணியளவில் அன்னதானம் நடைபெறும் அன்னதானம் செய்ய விரும்புபவர்கள் மடாலயத்தை தொடர்பு கொள்ளவும்: 7092023428

# எட்டு திக்குகளை ஆளும் சக்திகள்





1. கிழக்கு பிராம்மி
2. தென்கிழக்கு கௌமாரி
3. தெற்கு வராஹி
4. தென்மேற்கு சியாமளா
5. மேற்கு வைஷ்ணவி
6. வடமேற்கு இந்திராணி
7. வடக்கு சாமுண்டி
8. வடகிழக்கு மகேஸ்வரி

**பிராம்மி:** பிரம்ம தேவரின் அம்ச மும் சக்தி வடிவமே பிராம்மி என்று அழைக்கப்படுகிறாள்.

கிழக்கு திசையின் சக்தி வடிவம். பிராமி சக்தியை வணங்குவதால் குழந்தைப் பேறும், கலை ஞானமும் உண்டாகும்.

**கௌமாரி:** சரவணனின் அம்சமாக அவதரித்தவள் கௌமாரி என்று அழைக்கப் படுகிறாள். தென் கிழக்கு திசையின் சக்தி வடிவம். கௌமாரி தேவியை வழிபடுவதால் பதவி உயர்வும் மனதில் இருக்கும் பயமும் அகலும்.

**வராஹி:** விஷ்ணுவின் அவதாரமான வராக மூர்த்தியின் அம்சமாக இருப்பவர் வராஹி. தெற்கு திசையின் சக்தி வடிவம். வராஹி தேவியை வணங்கி வருவதால் எதிரிகளை அழித்து வெற்றி கொள்ளலாம். மனதில் தைரியம் பிறக்கும்.

**சியாமளா:** மீனாட்சி அம்மனின் அவதாரமாக திகழ்பவள் சியாமளா தேவி. தென் மேற்கு திசையின் சக்தி வடிவம். சியாமளா தேவியை வழிபடுவதால் சகல கலைகளிலும் தேர்ச்சி மற்றும் அறிவுக்கூர்மை உண்டாகும்._

**வைஷ்ணவி:** விஷ்ணுவின் அம்சமாக தோன்றியவர். நாராயணி என்றும் அழைக்கப் படுபவள். மேற்கு திசையின் சக்தி வடிவம். வைஷ்ணவியை வழிபடுவதால் உடல் ஆரோக்கியமும் எண்ணங்களில் மேன்மையும் உண்டாகும்.

**இந்திராணி:** தேவலோகத்தின் அதிபதியான இந்திரனின் அம்சமாக தோன்றியவர் இந்திராணி. வடமேற்கு திசையின் சக்தி வடிவம். இந்திராணியை வழிபடுவதால் நல்ல வாழ்க்கை துணை அமைத்து தருவார். பணத் தட்டுப்பாடு குறையும்.

**சாமுண்டி:** ருத்தரனின் அம்சமாக தோன்றியவர். எந்த விதமான சக்தி யாலும் கட்டுப்படுத்த முடியாதவர்.

வடக்கு திசையும் சக்தி வடிவம். சாமுண்டியை வணங்கி வருவதால் எடுத்த செயலில் எவ்விதமான இன்னலும் இன்றி வெற்றியும், பாது காப்பும் உண்டாகும்.

**மகேஸ்வரி:** சிவபெருமானின் அம்சமாக திகழக்கூடியவர் மகேஸ்வரி. வடகிழக்கு திசை யின் சக்தி வடிவம். மகேஸ் வரியை வழிபடுவதால் ஐயங்கள் மற்றும் கோபம் நீங்கும். சகல பிரச் சனைகளையும் தீர்த்து வைக் கக் கூடியவர்.

இவ்விதம் சகல சௌபாக்கியங் களையும் அளிக்கும் அஷ்ட திக் சக்திகளை வழிபட்டு வாழ்க்கையில் உள்ள எல்லா வளமும், சிறப்பும் பெற்று முன்னேறுவோம்.

# வேண்டுதல் நிறைவேற்றி தரும் நலம் தரும் சீரடி சாய்பாபா கோவில்





சிவகங்கை மாவட்டம் மானாமதுரையில் ஆதனூர் சாலையில் நலம் தரும் சீரடி சாய்பாபா திருக்கோவில் உள்ளது.

தற்போது இங்கு நடைபெறும் பிராத்தனை வழிபாட்டில் தினந்தோறும் ஏராளமான பக்தர்கள் வழிபாடு செய்து வேண்டுதல்களை பாபா விடம் தெரிவிக்கின்றனர். வியாழன் தோறும் ஆரத்தி சேவை நடைபெறுகிறது.

இதில் மானாமதுரை மற்றும் அதை சுற்றி உள்ள கிராமப்பகுதியில் இருந்து ஏராளமான பக்தர்கள் கோவிலில் பாபா தரிசனம் செய்கின்றனர். தற்போது நவராத்திரி விழா தொடங்கி நடைபெற்று வருகிறது.

வரும் 20ந்தேதி விஜயதசமி தினத்தன்று 108 கலச பூஜை யும் சாய் பாபாவின் 106வது சமாதி தின ஆராதனை நிகழ்ச்சியும் நடைபெறுகிறது. இது மானாமதுரையில் சாய்பாபாவிற்காக அமைக்கப்பட்ட முதல் கோவிலாகும்.

மானாமதுரையில் உள்ள பாபா கல்வி அறக்கட்டளை சார்பில் கோவில் அமைக் கப்பட்டு நிர்வாகம் செய்யப்பட்டு வருகிறது.

காய்ச்சல் மற்றும் உடல் நலம் குன்றிய வர்கள் வழிபட்டும் குணமடைந்து வருவ தால் நலம் தரும் சீரடி சாய்பாபாவை நாள் தோறும் வணங்கி செல்கின்றனர்.

# பெண் சக்தியை போற்றும் நவராத்திரி

உலகெங்கும் மிகவும் பிரபலமாககொண்டாடப்படும் பண்டிகைகளில் ஒன்று நவராத்திரி. கோவில்கள் மற்றும் வீடுகளில் ஒரே நேரத்தில் கொலு அமைத்து அம் மனை முழுமனதுடன் வழிபடுவார்கள்.

9நாள் கொண்டாடப்படும் இந்த பண்டிகையானது, லட்சுமி சரஸ்வதி என துர்கா தேவியின் 9 வடிவங்களையும் வழிபடுவதற்காக அர்ப்பணிக்கப்பட்டுள் ளது. நவ ராத்திரி யின் முடிவாக பத்தாவது நாளில் தான் விஜயதசமி கொண்டாடப்படுகிறது.

நவராத்திரி வருடத்திற்கு நான்கு முறை வருகிறது. ஆனால், புரட்டாசி மாதத்தில் வரும் நவராத்திரி உலகின் பல இடங்களில் மிகவும் விமரிசையாக கொண் டாடுவார்கள். ஏனெனில், இந்த மாதத்தில் தான் சூரியன் கன்னி ராசியில் நுழையும் மற்றும் அம்பாளின் பலவிதமான வடிவங்களை போற்றி வழிபடும் காலம் ஆகும். இதனால் தான் இதை மகா நவராத்திரி என்றும் சொல் லுவார்கள்.



ஒவ்வொரு ஆண்டும் நவராத்திரி ஆனது மகாளய அமாவாசைக்கு அடுத்து பத்து நாட்களில் கொண்டாடப் படும். அதாவது அக்டோபர் இரண்டாம் தேதி மகாளய அமாவாசை வருகிறது. இதற்கு அடுத்த நாளான அதாவது, அக்டோபர் 3ஆம் தேதி வியாழக்கிழமை அன்று தொடங்கி அக்டோபர் 12ஆம் தேதி சனிக்கிழமை வரை நவராத்திரி கொண்டாடப்பட உள்ளது. இதற்கிடையில் அக்டோபர் 11ஆம் தேதி வெள்ளிக்கிழமை சரஸ்வதி பூஜை வருகிறது.

இந்து புராணங்கள் படி, இந்த கால கட்டத்தில்தான் துர்கா தேவி தனது ஒன்பது வடிவங்களில் வெளிப்பட்டதாக சொல்லப்படுகிறது.

இதனால்தான் இந்த பண்டிகை ஒன்பது நாள் கொண்டாடப் படுகிறது.

இந்த ஒன்பது நாளில், ஒவ்வொரு நாளிலும் துர்க்கை யின் ஒவ்வொரு வடிவங்களையும் வழிபடுவது வழக்கம். ஒவ்வொன்றும் பெண் சக்தியின் வடிவத்தை குறிக்கிறது. மகிஷன் என்ற அரக்கனை துர்கா தேவி வதம் செய்து வெற்றி பெற்றதை நினைவுக் கூறி கொண்டாடும் நாள் இந்த திருநாளாகும். இது தீமைக்கு எதிராக நன்மையின் வெற்றியை குறிக்கும் நாள் ஆகும். இந்த நாளை தான் வட மாநிலங்களில் தசராவாக கொண் டாடுவார்கள்.






# நவராத்திரி விரதமும் அதன் பலன்களும்

வழக்கமாக புரட்டாதி மாதத்தில் வரும் வளர்பிறைப் பிரதமை நாள் முதல் நவமி நாள் வரை வருகின்ற ஒன்பது நாட்கள் நவராத்திரி விரத நாட்களாக அனுஷ்டிக்கப் பெறுகின்றது.

அதில் முக்குணங்களுக்கும் மூலமான சர்வலோக நாயகியை ஒன்பது நாள்களும் பூஜிக்கும்போது, முதல் மூன்று நாள்கள் தமோ குண சஞ்சாரியான ஸ்ரீதுர்கா பரமேஸ்வரியை வீரத்தையும், தைரி யத்தையும் வேண்டியும்

அடுத்த மூன்று நாள்கள்ராஜோ குண சொரூ பியான ஸ்ரீ மகாலட்சுமி யை சகல செல்வங் களையும் வேண்டியும்,

கடைசி மூன்று நாள்கள் சாத் வீகக் குண சொரூபியான ஸ்ரீ சரஸ்வதியை வித்தை, கல்வி, அறிவு, சகல கலை ஞானங் கள், ஆய கலைகள் அறுபத்து நான்கினையும் வேண்டியும் வணங்குகின்றோம்.

கன்னி ராசிக்கு அதிபதியான வன் புதன். வித்யாகாரகன் எனப்படு பவன். கல்வி, புத்தி, தொழில் ஸ்தானம் சரியாக அமைய புதனின் பார்வை முக்கியமானது என்பார். இந்தக் காலத்தில் நவராத்திரி கொண்டாடுவது சாலச் சிறந்தது என்று கருதி எம் முன்னோர் இவ் விரதத்தை அனுஷ்டித்து வந்துள்ளனர்.

பூவுலகை காத்தருளும் எல்லாம் வல்ல ஈச னுக்கு ஒரு ராத்திரி, அதுவே சிவராத்திரி. ஆனால் பரப்பிரம்மமான சக்திக்கு 9ராத்திரிகள். அதுவே நவராத்திரி என்று அழைக்கப்படுகிறது. பொதுவாக எல்லாப் பூஜைகளும் பகல் நேரத்தில் மேற்கொள்வது வழக்கம்.

ஆனால் சிவராத்திரி, நவராத்திரி நாட்களில் மட்டுமே மாலையிலும், இரவிலும் பூஜைகள் செய்யப்பெறுகிறன.

பிரதமை நவராத்திரியின் முதல் நாளில் தேவியான மகேஸ்வரி பாலா, மது கைடபர் அழிவுக்குக் காரணமான தேவி. இன்றைய தினம் மல்லிகை, வில்வம் கொண்டு அலங்கரிக்கவேண்டும். வெண் பொங்கல் நைவேத்தியம் செய்யலாம்.

துவிதியை இரண்டாம் நாள் தேவி கவுமாரி தேவியாக போற்றப்படுகிறாள். அவளே ராஜ ராஜேஸ்வரியாகவும் ஆராதிக்கப்படுகிறாள். முல்லை, துளசியால் அலங்காரம் செய்து புளியோதரை நிவேதனம் பண்ண வேண்டும்.

திரிதியை மூன்றாவது நாளுக்கு உரிய வாராகி அன்னை, கன்யா கல்யாணி என்று அழைக்கப்படுகிறாள். செண்பகம் மற்றும்சம் பங்கிகள் இவளுக்கு உகந்தவை. சர்க்கரை பொங்கல் படைத்து வழிபட வேண்டும்.

சதுர்த்தி நான்காம் நாளில் அருள்பவள் மகாலட்சுமி. இவள் ரோகிணி என்றுஅழைக் கப்படுகிறாள். மல்லிகை பூக்களால் அலங் காரம் செய்து, அன்னம் நைவேத்தியம் செய்து வழிபட வேண்டும்.

பஞ்சமி ஐந்தாம் நாளில் அன்னையை வைஷ்ணவியாகவும் மோகினியாகவும் அலங்கரிப்பர். முல்லைப்பூ அலங்கார மும் தயிர் சாதமும் இவளுக்கு ஏற்றவை. சஷ்டி ஆறாவது நாளுக் குரிய தேவி வடிவம் இந்திராணி. சர்ப ராஜஆசனத்தில் தேவி அமர்ந் திருக்கும்கோலத்தில் பூஜை செய்வது வழக்கம்.தேவிக்கு ஜாதி மலரே உகந்தது. தேங்காய் சாதம் படைத்து வணங் கலாம்.

சப்தமி ஏழாம் நாளில் தேவிமகா சரஸ்வதி, சுமங்கலி எனஅழைக்கப் படுகிறாள். இந்த அன்னைக்கு தாழம்பூ சூடி, தும்பை இலைக ளால் அர்ச்சனை செய்ய வேண் டும். எலுமிச்சை சாதம் நிவேதனம் செய்து வழிபடலாம்.



அஷ்டமி எட்டாவது நாளில் தேவியானவள் நரசிம்மிதருமி. நரசிம்மி வடிவின் சினம் தணிந்த கோலம் இது. இந்த நாளில் அன்னை அன்பே உருவாக அருள்பாலிக் கிறாள். இவளுக்கு உகந்த ரோஜா மலரை சூடி, சர்க்கரை பொங்கல் படையல் இட்டு வழிபடலாம். நவமி ஒன்பதாம் நாளில் அம்பிகை, சாமுண்டி மாதா, அம்பு, அங்குசம் தரித்த லலிதா பரமேஸ் வரியாகஅன்னையை வழிபடுவது வழக்கம். இன்றைய தினம் பால் பாயாசம் நைவேத்தியம் செய்து வழிபடலாம். தாமரை மலர்களால் அலங்கரித்து விஜயதசமி பத்தாவது நாள் விஜய தசமி. விஜயம் என் றாலே வெற்றி! தீயவை அழிந்து நன்மை பெருகும். நாம் தொடங்கும் காரியம் வெற்றி பெறும் என்பதற்காகவே விஜயதசமி கொண்டாடப்படுகிறது. நவராத்திரி யின்போது துர்க்கா, லட்சுமி, சரஸ்வதி ஆகிய மூவரையும் பூஜிப்ப வர்களுக்கு எதிலும் நலம்பெறும் வகையில் வெற்றி கிடைக்கும்.

விரத பலன் நவராத்திரி விழா வின்ஒவ்வொருநாளும்சிறப்பு என்றாலும் அதில்விசேஷ மான நாட்கள் கடைசி மூன்று நாட்கள். சக்தியற்றவர்களாக இருப்போர் நவராத்திரி விரதத் தில் பூஜை செய்வதற்கு மிகவும் முக்கியமான நாட்கள் சப்தமி, அஷ்டமி, நவமி தினங்களாகும். இந்த மூன்று நாட்களும் விரதத் தோடு பூஜித்தால் ஒன்பதுநாட்கள் பூஜித்த பலன் கிடைக்கும். நவராத்திரி விரதம் இருப்பவர்கள் இம்மையிலும் மறுமையிலும் நல்ல பயன் அடைவார்கள்.




## ஆன்மிகமலர்கள்

| |
|---|
| செல்வத்திற்கு உரிய மகாலட்சுமியைத் தொடர்ந்து 24 வெள்ளிக்கிழமைகள் வழிபட்டு வந்தால் வீட்டில் செல்வ வளம் அதிகரிக்கும். |
| வெள்ளிக்கிழமைகளில் பெருமாள் கோவிலில் உள்ள தாயாருக்கு அபிஷேகத்திற்குத் தேவையான பசும்பாலை வழங்கினால் பண வரவு உண்டாகும். பச்சை வளையலைத் தாயாருக்கு அணிவித்திட செல்வம் பெருகும். |
| சுக்கிர ஓரையில் மகாலட்சுமி அஷ்டோத்திரம் சொல்லி செந்தாமரை இதழ் கொண்டு அர்ச்சிக்க தனலாபம் கிடைக்கும். இதை வெள்ளிக்கிழமைகளில் செய்ய வேண்டும். |
| வெள்ளிக்கிழமையில் அரசமரத்தடி விநாயகருக்கு அகலில் 11 தீபம் ஏற்றி, 11 முறை வலம் வந்து வழிபட்டால் பணவரவு நிரந்தரமாகும். மேலும், மாலை நேரத்தில் பசுவிற்கு உணவளிக்கச் செல்வம் சேரும். |
| தினந்தோறும் உங்களின் குல தெய்வத்தை காலையில் பிரார்த்தனை செய்து வர வீட்டில் பண வரவு அதிகரிக்கும். |
| வியாழக்கிழமை மாலை 4 முதல் 5 மணி வரை உள்ள நேரம் குபேர காலமாகும். அதனால் இந்நேரத்தில் இல்லத்தில் குபேரனை வழிபட்டு வர பண வரவு அதிகரிக்கும். |
| தாமரை திரி போட்டுக் குபேரனுக்கு விளக்கேற்றி வழிபட்டால் பண வரவு அதிகரிக்கும். |
| அமாவாசையில் நம் முன்னோர்கள் இறந்த திதியில் தானம் செய்திட தனலாபம் உண்டாகும். |
| வீட்டில் திருப்பதி வெங்கடாஜலபதியுடன் பத்மாவதி தாயார் உள்ள படத்தை வைத்து வழிபட்டு வந்தால் பண வரவு அதிகமாகும். |

D.தனபாலன்
பத்திர எழுத்தாளர்

பத்திரம் சம்பந்தப்பட்ட அனைத்தும் சிறந்த முறையில் செய்துதரப்படும்
மேற்கு ரதவீதி, அண்ணாசிலை அருகில், மானாமதுரை 630 606
செல்: 9842409829 / 9791944001



19.10.2026
உங்கள் பகுதியில் உள்ள கோவில் கும்பாபிஷேகம், சிறப்பு விழாக்கள், சமய நிகழ்வுகள் போன்றவற்றை
இதுபோன்ற சிறப்பு மலராக வெளியிட தொடர்பு கொள்ளவும்
தரமாகவும், சிறப்பாகவும் செய்து தருகிறோம்...!
தொடர்பு கொள்ளவும்
அழகுராஜா
முதன்மை செய்தியாளர்
செல்: 9994323622
9444228203




# குணங்களுக்கு அதிபதி அம்பாள்



உயிர்களுக்கு குணத்தை அருளுபவள் அம்பிகை. ஆகவே அம்பி கையை 'குண சுந்தரி' என்று அழைப் பர். குணங்களோ மூன்றாகும். அவை"

1. ரஜோ குணம்: உடல் வலிவு தரும்
2. சத்வ குணம்:அறிவு கூர்மை, தெளிவு தரும்
3. தாமஸ குணம்: உடலுக்கு, மனதிற்கு ஓய்வு மற்றும் அமைதியை தரும்.

மேற்படி மூன்று குணங்களில் இறைவனின் அருள் மாறு படுமேயாயின்...

- தாமஸகுணம்: சோம்பேறித்தனத்தையும்,
- சத்வ குணம்: அறிவின்மையையும்,
- ரஜோ குணம்:பிறருக்குதுன்பம்விளைவிக் கும், ஆத்திரக்காரனாகவும் மாற்றிவிடும்.

இதுபோன்று குணங்களை மாறாமலிருக்க தொடர்ந்து அம்பாள் வழிபாடு செய்து வந்தால் குணங்கள் மாறுபாடு தடுக்கப்படும்.

# ஆன்மிக மலர்கள்



சுத்தமான நீரில் வாசனைத் திரவியம் கலந்து இருவேளைகளிலும் லட்சுமி மந்திரம் கூறியபடி வீடு முழுவதும் தெளித்திட செல்வம் சேரும்.

கனகதாரா தோத்திரம் ஸ்ரீசுக்தம் படிப்பதன் மூலமும், அவரவர் நட்சத்திர மூலிகையை பணப்பெட்டியில் வைப்பதன் மூலமும் பண வரவுக் கூடும்.

ஓடும் வெள்ளைக்குதிரை, ஜோடி கழுதைப் படம் ஆகியவற்றை அடிக்கடி பார்த்து வர பண வரவு அதிகமாகும்.

வீட்டில் வெள்ளை புறாக்களை வளர்த்தால் பணத்தட்டுப்பாடு நீங்கும். ஆந்தையை வழிபட்டால் பண வரவு உண்டாகும் மற்றும் ஆந்தை படத்தினை தொடர்ந்து பார்த்து வந்தால் செல்வ வளம் அதிகரிக்கும்.

ஒவ்வொரு மாதத்திலும் வரும் பௌர்ணமியன்று சத்தியநாராயண பூஜை செய்து வந்தால் செல்வங்கள் பெருகும்.

# ராகு கேது பெயர்ச்சி பொதுவான பலன்கள்

- **மேஷம்:** தொழில் மற்றும் நிதி நிலை சிறப்பாக இருக்கும். புதிய முதலீடு கள் லாபம் தரும்.
- **ரிஷபம்:** பணியிடத்தில் உங்கள் திறமைக்குரிய அங்கீகாரம் கிடைக்கும். ஆன்மீகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும்.
- **மிதுனம்:** நீண்ட நாள் ஆசைகள் நிறைவேறும். ஆரோக்கியத்தில் மட் டும் கூடுதல் கவனம் தேவை.
- **கடகம்:** குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். பொருளாதார ரீதியாக ஏற்ற இறக்கங்கள் இருக்கலாம்.
- **சிம்மம்:** இந்த பெயர்ச்சி உங்களுக்கு அனுகூலமாக இருக்கும். தடை பட்ட காரியங்கள் வெற்றிகரமாக முடியும்.
- **கன்னி:** புதிய முயற்சிகள் வெற்றி பெறும். சுபச் செலவுகள் ஏற்பட வாய்ப்புள்ளது.
- **துலாம்:** தொழில் மற்றும் வியாபாரத்தில் முன்னேற்றம் ஏற்படும். எதிரிகள் விலகுவார்கள்.
- **விருச்சிகம்:** சொத்து சம்பந்தமான விஷயங்களில் கவ னம் தேவை. உத்தியோகத்தில் கூடுதல் பணிச்சுமை இருக்கலாம்.
- **தனுசு:** எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். குடும்பத்தில் சுபிட்சமான சூழ்நிலை நிலவும்.
- **மகரம்:** மன அமைதி உண்டாகும். வெளியூர்பயணங் களால் அனுகூல மான பலன்கள் கிடைக்கும்.
- **கும்பம்:** தன்னம்பிக்கை அதிகரிக்கும். புதிய தொழில் தொடங்கும் யோகம் உண்டாகும்.
- **மீனம்:** பொருளாதார நிலை சீராக இருக்கும். பயணங்களின் போது எச்சரிக் கையுடன் இருக்க வேண்டும்.



ஐஸ்வர்யா ஜாதகாலயா
ஸ்ரீ உ.வே. கே.எஸ்.ரவீந்திரன், வேத சாஸ்திர ஜோதிடர்
98841 41870 | 98841 47630 | 94446 86670
அலுவலக முகவரி: #55, கவரை தெரு (A.M.R கல்யாண மண்டபம் அருகில்), மேற்கு மாம்பலம், சென்னை-600 033
அனைவரும் ராகு கேது க்ரகங்களின் அருளை பெற வேண்டுகிறோம்.




# சென்னையில் ஆன்மிக அன்பர்கள் நம்பிக்கை பெற்ற ஸ்ரீஜானகி டூர் டிராவல்ஸ்





இந்தியாவில் உள்ள புகழ் பெற்ற ஆன்மிக சுற்றுலா தலங்களுக்கு ஆன்மிக பக்தர்கள் மற்றும் மூத்த குடிமக்களை இறை அருளால் அழைத்து சென்று ஆன்மிக அன்பர்களின் நம்பிக்கை பெற்ற சுற்றுலா நிறுவனமாக ஸ்ரீ ஜானகி டூர்ஸ் நிறுவனம் உள்ளது.

ஆண்களுக்கு நிகராக அனைத்து துறைகளிலும் இன்று பெண்கள் சாதனை படைத்து வருகி அந்த வகையில் சுற்றுலா துறையில் சாதனை படைத்து வரும் ஸ்ரீ ஜானகி டூர்ஸ் டிராவல்ஸ் நிறுவனத்தினை சிறப்பான முறையில்நடத்தி வரும் நிர்வாக இயக்குனர்களில் ஸ்ரீபிரியா ரமேஷ் ஒருவர். சுற்றுலா தலங்களை தேர்ந்தெடுத்து முன்னேற்பாடாக வசதிகளை ஆய்வு செய்வது மற்றும் அலுவலகத்தை நிர்வகிப்பது சுற்றுலாக்களை வழி நடத்தி செல்வது என அனைத்து துறைகளிலும் இவரின் பங்கு முக்கியமாக உள்ளது. ஆன்மீக சுற்றுலா என்றாலே ஸ்ரீ ஜானகி டூர் டிராவல்ஸ் என்ற பெயர்தான் நினைவுக்கு வரும். வாடிக்கையாளர்களின் அமோக ஆதரவை பெற்று சிறப்பாக சுற்றுலாக்களைநடத்தி வருகிறது ஸ்ரீ ஜானகி டூர் டிராவல்ஸ். அந்தமான் சுற்றுலா மற்றும் இந்திய அளவில் மிக முக்கியமான ஆன்மிக சுற்றுலா ஆலயங்கள். புண்ணிய ஸ்தலங்கள், தீர்த்த யாத்திரைகள், தவிர இந்த ஆண்டு வாடிக்கையாளர்க ளுக்கு புதிய அனுபவமாக அந்தமான் இன்ப சுற்றுலா அழைத்து சென்றுள்ளனர். அனைத்து வசதிகளுடன் அளித்து வாடிக்கையாளர்களின் ஏகோபித்த ஆதரவை பெற்றுள்ளது.

தற்போது ஐரோப்பிய நாடுகளான பிரான்ஸ், பெல்ஜி யம், நெதர்லாந்து, ஜெர்மனி, சுவிட்சர்லாந்து, ஆஸ்திரியா, இத்தாலி, வாடிகன் சிட்டி உள்ளிட்ட நாடுகளுக்கு சுற்றுலா செல்ல சுற்றுலா பயணிகளுக்கு அழைப்பு விடுத்து உள்ளனர். இந்த சுற்றுலா பயணம் வருகிற ஏப்ரல் மாதம் 23ந் தேதி தொடங்குகிறது.

12 நாட்கள் இரவு மற்றும் 13 நாட்கள் பகல் என்ற திட்டமிடலுடன் செல்லும் இந்த சுற்றுலாவுக்கு ஒரு நபருக்கான கட்டணம் ரூ.3,77,900 என்று நிர்ணயித்துள்ளனர். சிறப்பான இடங்களை தேர்வு செய்து அனைத்து வசதிகளும் அளிப்பது. குறைந்த கட்டணத்தில் நிறைவான சேவை. முதியோர், குழந்தைகளுக்கு தனிப்பட்ட கவனம் இவைதான் எங்களது வெற்றிக்கு மூல காரணம். பெண்கள் தன்னம்பிக்கை யுடன் செயல்பட்டால் வெற்றி உறுதி. என்று ஸ்ரீஜானகி டூர் டிராவல்ஸ் இயக்குனர்கள் ரமேஷ், ஸ்ரீபிரியா ரமேஷ் ஆகியோர் தெரிவித்தனர். ஆன்மிக சுற்றுலா தொடர்புக்குர்புக்கு: 90942 79625

# தசரா பண்டிகை நோக்கமும் சரஸ்வதி தேவியின் சிறப்பும்



தச ஹர என்பது சமஸ்கிருத வார்த்தையாகும், அதாவது அனைவருக்கும் உள்ள 10 கெட்ட குணங்களை நீக்குகிறது.

| | |
|---|---|
| 1. | அஹங்காரம் (ஈகோ) |
| 2. | அமானவ்தம் (கொடுமை) |
| 3. | அன்யாயம் (அநீதி) |
| 4. | காம வசனம் (காமம்) |
| 5. | க்ரோதம் (கோபம்) |
| 6. | லோபம் (பேராசை) |
| 7. | மடம் (பெருமை) |
| 8. | மட்சரம் (பொறாமை) |
| 9. | மோஹம் (இணைப்பு) |
| 10. | ஸ்வர்தம் (சுயநலம்) |

இந்த 10 தீய குணங்களுக்கு மேல் "விஜயா" (வெற்றி) என்பதைக் குறிக்கும் "விஜயதசமி" என்றும் அழைக்கப்படுகிறது.

நாம் அனைவரும் இந்த எதிர்மறைகளில் இருந்து விடுபட்டு, வழக்கமான கோஷங்கள் மூலம் நமது உண்மையான சுயத்தை உணர்ந்து, ஆதி சக்தியின் தாமரை பாதங்களில் சரணடைவோமாக!

## சரஸ்வதி தேவியின் சிறப்பும்

தேவி மகாசரஸ்வதி, சுமங்கலி என அழைக் கப்படுகிறாள். இந்த அன்னைக்கு தாழம்பூ சூடி, தும்பை இலைகளால் அர்ச்சனை செய்ய வேண் டும். எலுமிச்சை சாதம் நிவேதனம் செய்து வழிபட லாம். லக்ஷ்மி எல்லோருக்கும் வருவாள் ஆனால் போய் விடுவாள்,

சரஸ்வதி வரமாட்டாள் வந்தால் போகமாட்டாள்.

சரஸ்வதி வரவேண்டுமானால் ஏழு ஜன்ம புன்னியம் செய்திருக்க வேண்டும்.

வெண் தாமரை மலரில் குடி இருப்பவள். அன்ன வாகனம் கொண்டிருப்பவள். முனிவர்களால் வணங்கப்படும் ஞான தேவி இவள். அமைதியே வடிவானவள். பாற்கடலில் தோன்றி நான்முகனின் சிருஷ்டிக்கு ஆதாரமாக நின்றவள். வீணையை ஏந்தி ஓங்கார நாதம் எழுப்புபவள்.

வேத ரூபிணி, நாத சொரூபிணி என்றெல்லாம் போற்றப்படும் ஞான மழை முகிலாக இந்த அன்னை விளங்குகிறாள். பேச்சின் ஆதாரமாக, கலைகளின் வித்தாக இருப்பவளும் இவள்தான். பிரம்மலோகத்தில், ஞான பீடத்தில் அமர்ந்து வேத கோஷங்களை, சங்கீத நாதங்களைக் கேட்டு மகிழ்பவள்.

சாரதா, த்ரைலோக்ய மோஹனா, காமேஸ்வரி என பலரூபம் கொண்டவள். நகுலி, ருத்ர வாகீஸ்வரி, பரா சரஸ்வதி, பால சரஸ்வதி, தாரண சரஸ்வதி, நித்யா சரஸ்வதி, வாக்வாதினி, வஷினி, மோதினி, விமலா, ஜபினி, சர்துஸ்வரி என்றெல்லாம் சரஸ்வதியை மந்திர சாஸ்திரங்கள் குறிப்பிடுகின்றன.

# நவராத்திரி விரதம், பூஜையால் கிடைக்கும் நன்மைகள்



நவராத்திரி பண்டிகையை முதன் முதலில் ராமர்தான் கொண்டாடியதாக கூறப்படுகி றது. ராமபிரான் நவராத்திரி விரதத்தை கடைபிடித்த பிறகு தான் அவருக்குச் சீதை இருக் குமிடம் தெரிந்தது என்று கூறப் படுகிறது.

சோழர் காலத்தில் நவராத்திரி திருவிழா அரசு விழாவாகக் கொண்டாடப்பட்டது. நவராத் திரி நாட்களில் பெண்கள்கன் யா பூஜை செய்வதால் சகலசெல் வங்களையும் பெறலாம்.

விஜயதசமி தினத்தன்று பெருமாள் கோவில் களில் வன்னி மரக்கிளையை வைத்து அதில் பெருமாளை எழுந்தருளச் செய்து பூஜை நடத்துவார்கள். இந்த வழிபாட்டில் கலந்து கொண்டால் கிரக தோஷங்கள் விலகி ஓடி விடும். நவராத்திரி நாட்களில் இரவு 7 மணி முதல் 9.30 மணி வரை தேவி வழிபாடு செய்ய உகந்த நேரமாகும்.

ஈசனும், அம்மையும் ஒன்று சேர்ந்து ஊஞ் சலில் ஆடுகின்ற தரிசனத்தை 9 நாட்களும் கண்டால் நவராத்திரி பூஜை செய்தபலன் கிடைக்கும்.

நவராத்திரி நாளில் வரும் சப்தமி திதியன்று வழிபட்டால் ஸ்ரீஹயக்ரிவப் பெருமாளின் அரு ளைப் பெறலாம். அன்று ஸ்ரீலலிதாசகரஸ்ர நாமத்தையும் நவாக்சரி மந்திரத்தையும் ஓதுவது கூடுதல் பலன்களைத் தரும். அனைத்திலும் தேவியே உள்ளாள் என்பதை உலகுக்கு உணர்த்தவே நவராத்திரி நாட்களில் கொலு வைக்கப்படுகிறது.

புரட்டாசி நவராத்திரியில் மட்டுமே கொலு வைக்கிறார்கள். ஆனால் நான்கு விதமான நவராத்திரி நாட்களிலும் கொலுவைத்தால்தான் அம்பிகை அருள் கிடைக்கும் என்பது சிலரின் கருத்தாகும்.

வீட்டில் கொலு வைத்தால், அம்பிகை நம் வீட்டில் எழுந்தருளி விட்டாள் என்பது நம்பிக்கை யாகும். ஒரு நவராத்திரிக்கு கொலு வைத்தால் பிறகு வாழ் நாள் முழுவதும் நவராத் திரி நாட்களில் கொலு வைக்க வேண்டும் என்கிறார்கள்.

நவராத்திரி நாட்களில் பகலில் சிவ பூஜையும் இரவில் அம்பிகை பூஜையும் செய்வதே சரி யான வழிபாடாகும் என்று கூறப்படுகிறது நவராத்திரி 9 நாட்களும் தினமும் பகலில் 1008 சிவ நாமாவளிகளைஜெபித்து வழிபாட்டால் அளவிடற்கரிய பலன்கள் கிடைக்கும்.

நவராத்திரி நாட்களில் சுண் ணாம்பு மாவினால் கோலம் போடக்கூடாது. அரிசி மாவைப் பயன்படுத்திதான் கோலமிட வேண்டும்.

அவ்வாறு செய்வதால் குடும்ப ஒற்றுமையும், செல்வமும் வளரும். சுண்ணாம்பு மாவு பயன் படுத்தினாலோ, எதிர்மறையான விளைவு களே உருவாகும்.

நவராத்திரி கோலத்தை செம்மண் கலந்து போட்டால் அம்பாள் மனமகிழ்ந்து வருவார். நவராத்திரி 9 நாட்களும் வாசலில் மாவிலை கட்டி பூஜை செய்தால் ஐஸ்வர்யம் உண்டாகும். கொலு வைத்திருப்பவர்கள் அதன் முன் நவக்கிரக கோலம் போட்டால் அம்பாள் அனுக் கிரகமும், நவக்கிரகப் பலன்களும் கிடைக்கும்.

தினந்தோறும் நவராத்திரி பூஜையின் நிறை வாக, பலவிதமான மங்கலப் பொருட்களை (மஞ் சள், குங்குமம், வளையல்,ரிப்பன் போன்றவை) ஏழைகளுக்கு தானமாக அளிக்க வேண்டும். தனித்து தானம் செய்வதை விட, பலரும் ஒன்று சேர்ந்து, மங்கலப் பொருட்களை மிகப் பெரிய அளவில் தானமாக அளிப்பதே சிறப்பானது.

தான தர்மங்கள்தான் பூஜைகளை நிறைவு செய்ய உதவிகின்றன. ஆகவே நவராத்திரியில் தானமளிப்பது மிகமிக முக்கியம்.

கன்னிப் பெண்களுக்குப் புதிய ஆடை முதலி யவை பரிசாக அளிக்கப்படவேண்டும் என்பது நவராத்திரி விழாவின் முக்கிய அம்சமாகும்.




aanmeegamalar.com

# நவராத்திரி, ஆயுதபூஜை சிறப்புகள்




சிவனுக்கு சிவராத்திரியைப் போன்று அம்மனுக்கு நவராத்திரி என்பது உகந்த விஷேச தினமாக போற்றப்படுகிறது. இந்த நவராத்திரி நான்கு வகையாக உள்ளது.

ஆடி மாதம் அமாவாசைக்கு அடுத்து வரும் பிரதமை முதல் ஒன்பது நாட்கள் கொண்டாடப் படும் நவராத்திரி **வாராஹி நவாராத்திரி** என அழைக்கப்படும்.

புரட்டாசி மாதம் அமாவாசைக்கு அடுத்து வரும் பிரதமை முதல் ஒன்பது நாட்கள்கொண் டாடப் படும் நவராத்திரி **சாரதா நவாராத்திரி** என அழைக்கப்படும்.

தை மாதம் அமாவாசைக்கு அடுத்து வரும் பிரதமை முதல் ஒன்பது நாட்கள் கொண்டாடப் படும் நவராத்திரி **சியாமளா நவாராத்திரி** என அழைக்கப்படும்.

பங்குனி மாதம் அமாவாசைக்கு அடுத்து வரும் பிரதமை முதல் ஒன்பது நாட்கள்கொண் டாடப்படும் நவராத்திரி **வசந்த நவாராத்திரி** என அழைக்கப்படும்.

இதில் ஒரு படி மேல உயர்வாக சொல்ல வேண்டுமானால், ஒளியும் இருளும் சமபங் காகக் கொண்ட சுற்றில் ஒளிக்காலத்தில் வசந்த நவராத்திரியும், இருள் காலத்தில் சாரதா நவராத்திரியும் என பெயர் பெற்றுள் ளது. இதில் சாரதா நவராத்திரியே விரதமாக வும் பண்டிகையாகவும் விழாவாகவும் கொண் டாடப்படுகின்றது.

அவ்வாறான இந்த நவராத்திரி ஒன்பது நாட்களிலும் முறையே மூன்று நாட்களுக்கு பார்வதி, லட்சுமி, சரஸ்வதி என வழிபடுவது நன்மையை அளிக்கும்.

சாரதா நவராத்திரியை ஸ்ரீ ராமரும், ஸ்ரீ கிருஷ்ணரும் வழிபாடு செய்துதான் தங்களது கஷ்டங்களில் இருந்து விடுபட்டதாக புராணங் கள் கூறுகின்றன.

நவராத்திரியின் ஒன்பது நட்களும் பராசக்தி ஒவ்வொரு தேவியின் வடிவில் ஒருவயது முதல் பத்து வயது கன்னிப்பெண் வடிவில் அவதாரம் செய்கிறார். கன்னியின் வயதிற்கேற்ப ஒவ் வொரு நாளும் ஒரு கன்னிகையாக ஒன்பது நாள் ஒன்பது கன்னிகைகளையும் ஒன்பது சுமங்கலிகளையும் பூஜை செய்வது அளவிட முடியாத புண்ணியம் உண்டாகும்.

## நவராத்திரி வரலாறு

சும்பன், நிசும்பன் என்ற அண்ணன், தம்பி இருவரும் அரக்கர்கள். அவர்களது அக்கிரம ஆட்சி தாங்காமல், மக்கள் தவித்திருக் கின்றனர். இந்த அரக்கர்களை எப்படியாவது அழித்து, மக்களைக் காப்பாற்ற வேண்டும் என, சிவா, விஷ்ணு, பிரம்மா மும்மூர்த்திகளிடம், தேவர்கள் முறையிட்டிருக் கின்றனர்.

மும்மூர்த்திகளும், மகா சக்தியைத் தோற்று வித்து, அவளுக்குத் தங்களது சக்தியையும், ஆயுதங்களையும், வாகனங்களையும் அளித் தனர். தேவி, அழகிய பெண் உருவம் எடுத்து, பூலோகத்திற்கு வந்தாள்.

அரக்கர்களின் வேலையாட்கள், சண்டன், முண்டன் என்ற இருவரும், இந்த அழகுப் பதுமையான மகாசக்தியைப் பார்த்ததும், தங்களது ராஜாக்களுக்கு ஏற்றவள் இவள் என முடிவு செய்து, தேவியிடம், தங்களது ராஜாக்களில் ஒருவரைத் திருமணம் செய்து கொள்ளும்படி வற்புறுத்தினர். அப்போது தேவி, தான் ஒரு சபதம் செய்திருப்பதாகக் கூறி, “யார் என்னை போரில் வெல்கின்றனரோ, அவர்களைத்தான் மணப் பேன்’ என்றாள்.

அதை ஏற்றுக் கொண்ட கம்பன், நிசும்பனும் தனது அடியாட்கள் ஒவ்வொருவராக போருக்கு அனுப்பி வைக்கிறான்.

இவ்வாறாக அனைத்து அரக்கர்களையும் தேவி துவம்சம் செய்து அழித்து விடுகிறாள். இவ்வாறு ஒவ்வொருவரையும் அழித்து இறுதியில், சும்பன், நிசும்பன்களையும் அழித்து விடுகிறாள் தேவி.

இவ்வாறு போர் தொடர்ந்து ஒன்பது நாட்கள் நடைபெற்று முடிவிற்கு வந்ததை, ஒவ்வொரு மனிதர் களுக்குள்ளும் இருக்கும் கெட்ட குணங்களை அளிக்கும் விரத நாட்களாக மாற்றியுள்ளனர் நமது முன்னோர்கள்.

முதல் மூன்று நாட்கள் துர்க்கா பூஜையின் போது, தேவி மலை மகளாக இருந்து இச்சா சக்தியை, அதாவது, நமக்குள் இருக்கும் கெட்ட எண்ணங்களை அழிக்கும் தீர்மானத்தைத் தருகிறாள்.

இரண்டாவது மூன்று நாட்கள் லட்சுமியாக இருந்து, நமக்கு க்ரியா சக்தியை, அதாவது, வேண்டிய எல்லா செல்வங்களையும் கொடுத்து, நம்மை முழு மனிதனாக ஆக்குகிறாள்.

மூன்றாவது மூன்று நாட்கள் சரஸ்வதியாக உரு வாகி, நமக்கு ஞான சக்தியை அருளி, நாம் மோட்சம் அடையும் வழியைக் காட்டுகிறாள்.

மேற்கண்டவாறு மூன்று சக்திகளுக்கும் சேர்த்து ஒன்பது நாட்கள் விரத முறையை வகுத்து அந்த நாட்களை நவராத்திரி விழாவாக கொண்டாடி வந்துள் ளனர் நமது முன்னோர்கள்.

கல்விக்கு உரிய சரஸ்வதி தேவி, செல்வத்துக்கு உரிய லட்சுமி தேவி, வீரத்துக்கு உரிய பார்வதி தேவி ஆகிய முப்பெருந்தேவியரையும் 9 நாட்கள் வழிபடுவதே நவராத்திரி என்று வகுத்து. முதல் 3 நாட்கள் சக்திக்கு உரியதாகவும், அடுத்த 3 நாட்கள் லட்சுமி தேவிக்கு உரியதாகவும், கடைசி 3 நாட்கள் சரஸ்வதி தேவிக்கு உரியதாகவும் கொண்டாடப்படுகிறது. இவ்வழி பாட் டின் மூலம் வீரம் செல்வம் கல்வி என்றும் மிகப் பெரும் பேறுகளை நாம் பெற்றுக்கொள்ள முடியும்.

## ஆயுத பூஜை

மனிதனுக்கு உதவும் அனைத்தும் ஆயுதங்கள் என்று போற்றப்படும். ஆயுதம் என்பதன் உண்மை யான பயனை உணர்த்தத்தான் ஆயுத பூஜை கொண் டாடப்படுகிறது. உயிர்ப் பொருள்கள், உயிரற்றப்பொருட் கள் அனைத்திலும் நீக்கமற இறைபொருள் உறைந்துள் ளது. வாழ்வில் நம் உயர்வுக்கு உதவும் ஆயுதங்களை போற்றும் விதம் அவற்றையும் இறைபொருளாகப் பாவித்து வணங்குவதே ஆயுதபூஜை எனவும் சொல்ல லாம். இதுவரை தொழில் சிறப்பாக நடந்ததற்கு கடவுளுக்கு நன்றி தெரிவிக்கும் வகையிலும் இனி சிறப்பாக நடப்பதற்கு அருள் வேண்டும் வகையிலும் இப்பண்டிகை கொண்டாடப்படுகிறது.

மகிஷனைவென்ற துர்க்கை தீயவை அழிந்து நல்லவை வெற்றி பெற்ற நாளாக விஜயதசமி கொண் டாடப்படுகிறது. மகிஷாசுரனை அழிக்க தேவியானவள் துர்க் கை வடிவம் எடுத்தாள். 9 நாட்கள் நீடித்த போர், விஜயதசமியன்று முடிவுக்கு வந்தது. தீய சக்தியான மகிஷாசுரனை துர்கா தேவி வதம் செய்தாள். நல்ல சக்தியின் வெற்றி திருவிழாவாக விஜயதசமி கொண்டாடப்படுகிறது என்கின்றன புராணங்கள்.

இந்த நாளில் அன்னை துர்கா தேவியை வேண்டி எந்த செயலையும் தொடங்கினால் தீமைகள் விலகி, நலங்களும் வளங்களும் சேரும் என்பது நம்பிக்கை.


ஸ்ரீமதே ராமானுஜாய நமஹ





**ராகு கேது பெயர்ச்சி மஹா யாக விழா அழைப்பிதழ்**

அன்புடையீர்! வணக்கம், நவக்கிரகங்களின் முக்கியமான கிரகங்களாக கருதப்படும் ராகு மற்றும் கேது ஆகியவற்றின் பெயர்ச்சி வரும் ஐப்பசி மாதம் 27ஆம் தேதி (13.11.2026-நவம்பர் மாதம்) வெள்ளிக்கிழமை மாலை 5:14 மணி அளவில் ராகு பகவான் "கும்ப ராசியிலிருந்து" " மகர ராசிக்கும்" கேது பகவான் "சிம்ம ராசியிலிருந்து" "கடக ராசிக்கும்" பெயர்ச்சி அடைகிறார்கள். இந்த ராகு கேது பெயர்ச்சி ஜோதிடப்படி முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.

இதன் பொருட்டு, உலக நன்மைக்காகவும், ராகு கேது பெயர்ச்சி பரிஹாரமாகவும், 13.11.2026 வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு தொடங்கி அன்று மாலை 8 மணி வரை விசேஷமாக ராகு-கேது ஜெபம் மற்றும் ராகுவின் அதிதேவதையான தேனு ப்ரத்தியதி தேவதையான நிருரிதி ஜெபம், அதிஷ்டான தேவதாயான துர்கா தேவி, இஷ்ட தேவதையான நாகராஜர் மற்றும் கேதுவின் அதிதேவதை ப்ரம்மா, ப்ரத்தியதி தேவதை சித்திர குப்தர், கேதுவின் அதிஷ்டான தேவதை பைரவர் மற்றும் ஆஞ்சநேயர் ஆகியோர்களின் ஜபமும் சாஸ்திர முறைப்படி செய்யப்பட்டு, விசேஷமான ராகு கேது பெயர்ச்சி பரிஹார மஹா சாந்தி யாகம் 13.11.2026 வெள்ளிக்கிழமை அன்று நடைபெறவுள்ளது, இந்நாளில் அனைவரும் வந்திருந்து இந்த பரிஹார பூஜையில் கலந்து கொண்டு ராகு கேது க்ரகங்களின் அருளை பெற வேண்டுகிறோம்.

இப்பெரும் நிகழ்வை முன்னிட்டு ஐஸ்வர்யா ஜாதகாலயா நடத்தும்

**ராகு கேது பெயர்ச்சி பரிஹார யாகம்**

13.11.2026 வெள்ளிக்கிழமை அன்று காலை 7 மணி முதல் நடைபெறவுள்ளது

| | | | |
|---|---|---|---|
| சனி | | | |
| | 03 சிம்-குரு<br>27 மகா-ராகு<br>27 கடக-கேது | | செவ் கேது |
| ராகு | | | குரு |
| சந் | | சூரி சுக் புதன் | |

**பரிஹாரம் புரிந்திடவேண்டிய ராசிகள்:**

**கும்பம், மகரம், சிம்மம், கடகம்**



(நற்பலன் பெறும் மற்றும் ஏனைய ராசி அன்பர்களுக்கு அனுகூலமாக இருந்தாலும் அவர்களும் மிக அற்புதமான யோகங்களை பெறுவதற்கு ராகு கேது பெயர்ச்சி பரிஹார மஹா யாகத்தில் கலந்து கொள்வது மேலும் சிறப்பாகும்)

ராகு கேது பெயர்ச்சி பரிஹார யாகத்தை ஜோதிட வித்வான்

ஸ்ரீ உ.வே. **கே.எஸ்.ரவீந்திரன்** அவர்களின் தலைமையில்

சிறந்த வேத வித்வான்கள் மஹா யாகத்தை சிறப்பாக செய்ய இருக்கின்றார்கள்

**இடம்: ஸ்ரீ ராம் சமாஜ் அயோத்தியா அஸ்வமேத மஹா மண்டபத்தில்**

(அயோத்தியா மண்டபம், மேற்கு மாம்பலம்)

எண்.47,ஆர்ய கவுடா சாலை, மேற்கு மாம்பலம், சென்னை-600033.

ராகு கேது பெயர்ச்சி பரிஹார யாக பூஜைக் கட்டணம் ஒரு நபருக்கு ரூ.1509/-

(முன் பதிவு செய்துக்கொள்ளவும்), அனைவரும் கலந்துகொண்டு பலன் பெறுவீர்

**G-Pay Number: 9884141870 & 9884147630**

மேலும் முதல் பதிவு செய்யும் 100 இறையன்பர்களுக்கு "சர்வ ரக்ஷா சுதர்சன மஹா மந்திர ரக்ஷை" ப்ரார்த்தனை செய்து பிரசாதமாக வழங்கப்படும்.

ராகு கேது பரிஹார யாக பூஜை (கட்டணம் செலுத்தியவர்களுக்கு வழங்கப்படும்) ப்ரசாத விவரங்கள்:

1.மஞ்சள், 2.விபூதி, 3.குங்குமம், 4.அக்ஷதை, 5.வெற்றிலை, 6.பாக்கு, 7.தேங்காய், 8.வாழைப்பழம், 9.ஹோம ரக்ஷை, 10.ராகு எந்திரம், 11.கேது எந்திரம், 12.ரக்ஷை கயிறு

பூஜையை Whatsapp, Facebook, Youtube, மற்றும் குறிப்பிட்ட SateLlite சேனல்கள் மூலமாக பார்த்து பயன்பெறலாம்.

நேரடியாக கலந்துகொள்ள முடியாதவர்கள் ஹோமரக்ஷை மற்றும் அனுக்கிரஹ ப்ரசாதம் அஞ்சல் மூலமாக அனுப்பிவைக்கப்படும்.